THE HON. SRI P. KAKKAN : மூன்று ரோடுகளை எடுத்துக்கொள்வதாக இருந்தது. அவைகளாவன :

I. National Highways 45—Great Southern Trunk Road, i.e., Madras-Tiruchirappalli-Dindigul Road.

(*a*) Starting point—Wallajah Gate at Fort St. George.

(*b*) Route—Mount Road up to City limit.

II. National Highways 4—Great Western Trunk Road, i.e., Madras-Chittoor-Bangalore Road.

(*a*) Starting point—Wallajah Gate Road at Fort St. George.

(*b*) Route—Wallajah Gate to Fort Umbrella (i.e., Muthuswamy Iyer Road-General Hospital Road and Poonamallee High Road up to City limit).

III. National Highways 5—Great Northern Trunk Road, i.e., Madras-Calcutta Road.

(*a*) Starting point—Junction of Wall Tax Road with Poonamallee High Road near Central Station.

(*b*) Route—Wall Tax Road-Erukkancheri High Road up to City limit.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், சென்னைபோன்ற தலைசிறந்த நகரசபை நல்ல முறையில் நடந்து வருவதால் அதன் இடத்திலேயே இந்த நிர்வாகத்தை ஒப்படைக்கக்கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கே இருக்கிற கமிஷனரையும் மேயரையும் கேட்டால் அதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம்.

SRI K. ANBAZHAGAN : சென்னை போன்ற பெரிய நகரசபைகளுக்கு இந்த நெடுஞ்சாலைகளில் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்கள் பலவாகும். ஆகவே தேசீய நெடும் சாலைகளின் நிர்வாக பொறுப்பை அவர்களிடத்திலேயே இருக்க வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா ? இப்படிப்பட்ட பெரிய சாலைகளை சீர்செய்வதற்கு—இவைகள் தேசீய நெடுஞ்சாலைகளை இணைப்பவை என்ற அடிப்படையில் இவற்றை எடுத்துக் கொள்ளாமல் நகரசபைக்கு அதிகப்படியான உதவித் தொகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : அதற்குரிய செலவு தொகையாகிய 32 ஆயிரம் ரூபாயை மௌண்ட்ரோடு, பூந்தமல்லி ஹை ரோடு முதலியவைகளைப் பராமரிப்பதற்கு என்று கொடுக்கப்பட்டுவருகிறது. மற்ற ஜில்லாக்களிலும் அப்படி கொடுக்கப்பட்டுவருகிறது. மற்றவைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள விரும்புகிறது.

Children's theatre.

* 584 *Q*.—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any review of the working of the Children's theatre was conducted ; and

(*b*) if its working is satisfactory whether there is any proposal to open such theatres in other cities ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) There is no proposal to open such theatres in other cities.

Sri D. S. AUTHIMOOLAM: இந்த சில்ரன் தியேட்டர் என்பது, அங்கே அசெம்பளியை நடத்தவிடாமல் செய்வதற்காகத்தான் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அது ஒரு "பார்ஸ்" என்பதற்காக அதை வைத்திருக்கிறார்கள் என்று ஜனங்கள் அபிப்பிராயப்படுவது அரசாங்கத்தின் காதுக்கு எட்டி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்? (சிரிப்பு).

Mr. SPEAKER: The Hon. Minister need not answer.

Sri A. VEDARATHNAM: இப்படிப்பட்ட தியேட்டர்கள் கிராமப் பகுதிகளிலும் இதர ஜில்லாக்களிலும் ஏற்படாத போதிலும் இங்கே காட்டப்படும் படங்களை காட்டுவதற்கு வசதியுள்ள பள்ளிக்கூடங்களில் இலவசமாக காட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM: பள்ளிக்கூடங்களில் காட்டுவதற்கு என்று தனிப்பட்ட சினிமாப் படங்கள் தயாரிக்கப்பட்டு அந்தந்த பள்ளிக்கூடங்களில் சினிமா படங்களைக் காட்டக்கூடிய கருவிகள் இருந்தால் அங்கே காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri P. U. SHANMUGAM: கனம் சபாநாயகர் அவர்களே, வெளியூரில் இருந்து சென்னைக்கு உல்லாசப் பிரயாணம் வருகிற மாணவ மாணவிகளுக்கும் காட்சி பார்க்க இந்த பாலர் அரங்கு உபயோகத்திற்கு விடப்படுமா என்று கேட்கிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM: சினிமாப் பார்ப்பதற்கு மற்ற குழந்தைகளைப் போலவே உல்லாசப் பிரயாணம் வருகிற இந்த மாணவ மாணவிகளும் வந்து பார்க்கலாம்.

Sri M. R. KANDASWAMY MUDALIAR: இந்த பாலர் அரங்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதால் இதுபோல் சேலத்திலும் ஒன்று ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

Mr. SPEAKER: இப்படி ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் ஜில்லாவைப்பற்றிக் கேட்பதாக இருந்தால் தனிக் கேள்விதான் போட வேண்டும்.

Sri A. GOVINDASAMY: இந்தக் குழந்தைகள் அரங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தில் இருந்து ஏதாவது நிதி உதவி கிடைக்கிறதா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதைப்பற்றி இப்போது தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri V. SANKARAN: பாலர் அரங்கம் என்றாலும் முதியவர்கள் அதிகமாக வந்து டிக்கெட் வாங்கிவிடுவதனால் பாலர்களுக்கு இடமில்லாமல் போகிறது. ஆகவே நிலத்திற்கு சீலிங் வைப்பதுபோல இந்த அரங்கத்திலும் இத்தனை முதியவர்கள்தான் வரலாம் என்று சீலிங் வரையறை செய்யப்படுமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: குழந்தைகள் வருகிறபோது அவர்களை அழைத்துக்கொண்டு முதியவர்களும் வருகிறார்கள். தடுக்க முடியாது. ஆகவேதான் முதியவர்கள் என்றால் இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

Lady vaccinator at Ambur.

* 585 *Q.*—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware that the post of a lady vaccinator had been vacant for the last six months in Ambur;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) when the post will be filled up?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) & (*b*) It is presumed that the hon. Member refers to the post of Health Assistant. The post was vacant for want of a qualified candidate during the period from 15th March to 23rd December 1959.

(*c*) It has been filled up again from 23rd December 1959 (a.n.) but still not by a qualified person.